பத்தாம் வகுப்பு
மொழித்திறன் பயிற்சி

கீழ்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக .

1 .கல் - குவியல்
2 .பழம் - குலை
3 .புல் - கட்டு
4 .ஆடு - மந்தை
5 . சாவி - கொத்து
6 .எறும்பு - சாரை
7 .வீரர் - படை
8 .யானை - கூட்டம்
9 .மாமரம் - தோப்பு
10 .வாழைமரம் - தோட்டம்
11 .வாழைப்பழம் - தார்

வேர்ச்சொல்லைப் பயன்படுத்தி எழுவாய்த் தொடர் , பெயரெச்சத் தொடர் , வினையெச்சத் தொடர், விளித்தொடர் , வேற்றுமைத் தொடர் அமைக்க

1 . பார் :
அ) துளிர் பார்த்தாள் - எழுவாய்த் தொடர்
ஆ) பார்த்த துளிர் - பெயரெச்சத் தொடர்
இ) பார்த்து சிரித்தாள் - வினையெச்சத் தொடர்
ஈ) துளிரே பார் ! - விளித் தொடர்
உ) துளிருடன் பார்த்தேன் - வேற்றுமைத் தொடர்

2 . வா :
அ) குழந்தை வந்தது - எழுவாய்த் தொடர்
ஆ) வந்த குழந்தை - பெயரெச்சத் தொடர்
இ) வந்தது குழந்தை - வினையெச்சத் தொடர்
ஈ) குழந்தையே வா ! - விளித்தொடர்
உ) குழந்தைக்காக வந்தாள் - வேற்றுமைத் தொடர்

இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

1. சிலை - சீலை
சிலையைத் திரைச்சீலையால் மறைத்திருக்கிறார்கள் .
2. தொடு - தோடு
தொடு உணர்வின் மூலம் தோடு காதில் உள்ளதை தெரிந்துகொள்ளலாம் .
3. மடு - மாடு
மடுவில் தண்ணீர் குடித்துக் கொண்டு இருந்தது ராமனின் மாடு .
4. மலை - மாலை
மலையேறும் போது மாலை நேரமாகிவிட்டது .
5. வளி - வாளி
வளிமண்டல காற்று பெற மரம் நட்டு வாளி நிறைய தண்ணீர் ஊற்றுவோம் .

6. விடு - வீடு
இளம் வயதிலே தீய பழக்கங்களை விட்டு விடு ; வீடு சென்று மகிழ்ச்சியாக இரு.
7. இயற்கை - செயற்கை
பாதை தெரியாத இயற்கைக் காடுகளில் பயணிக்கச் செயற்கைக் கருவிகள் பயன்படுகின்றன .
8. கொடு - கோடு
ஆசிரியர் எழுதுகோலை மாணவனிடம் கொடுத்து , கோடு வரையச் சொன்னார்.
9. கொள் - கோள்
மனதிலே நம்பிக்கை வைத்துக் கொள் ; கோள்களுக்கும் சென்று வருவாய் என தந்தை மகனுக்கு தைரியம் ஊட்டினார் .
10 . சிறு - சீறு
சிறு காளையும் சீறிப்பாயும்.
11 . தான் - தாம்
மாணவர்கள் தான் படித்தக் கருத்துகளைத் தாமே எழுதிப் பார்த்து மதிப்பீடு செய்துகொண்டார்கள் .
12 . விதி - வீதி
சாலை விதியை மதித்து , வீதியைக் கடந்து செல்வோம் .

தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.

கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்
எ.கா: அழகிய குளிர்ந்த கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

1. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.
பயன்தரும் மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

2. வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.
இன்பமும் துன்பமும் நிறைந்த வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

3. கல்வியே ஒருவர்க்கு உயர்வு தரும்.
நன்னெறிக் கல்வியே உயர்வு தரும்.

4. குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.
படைப்புத்திறன் மிக்க குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.
தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.

1. நிலத்துக்கு அடியில் கிடைக்கும் <u>புதையல்</u> யாவும் அரசுக்கே சொந்தம் நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் <u>புதைத்தல்</u> நிலத்தடி நீர் வளத்தைக் குன்றச் செய்யும். (புதைத்தல் / புதையல்)
2. காட்டு விலங்குகளைச் <u>சுடுதல்</u> தடை செய்யப்பட்டுள்ளது செய்த தவறுகளைச் <u>சுட்டல்</u> திருந்த உதவுகிறது. (சுட்டல் / சுடுதல்)

3. காற்றின் மெல்லிய தொடுதல் பூக்களைத் தலையாட்ட வைக்கிறது, கைகளில் நேர்த்தியான தொடுத்தல் பூக்களை மாலையாக்குகிறது. (தொடுத்தல் /தொடுதல்)
4. பசுமையான காட்சி ஐக் காணுதல் கண்ணுக்கு நல்லது.(காணுதல் /காட்சி)
5. பொது வாழ்வில் நடித்தல் கூடாது. நடிப்பு இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல் / நடிப்பு)

தொடர்களை அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.

எ.கா: அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார்.
(தனிச் சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடர்களாக மாற்றுக)
அழைப்பு மணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.

1. இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.(தொடர் சொற்றொடராக மாற்றுக)

இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தி, புத்தக அடுக்கங்களில் அடுக்கி, புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.

2. ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்து கொண்டு, கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.)

ஒயிலாட்டக் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக் கொள்வர். காலில் சலங்கை அணிந்து கொள்வர். கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.

3. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
(கலவைச் சொற்றொடராக மாற்றுக)

கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

4. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)

ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அதனால் அறையில் உள்ளவர்களின் பேச்சு தடைபட்டது.

தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.

1. வானம் கருக்கத் தொடங்கியது. மழைவரும் போலிருக்கிறது.
2. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் சிவந்தது.
3. வெள்ளை மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.
4. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் பச்சை புல்வெளிகளில் கதிரவனின் மஞ்சள் வெயில் பரவிக் கிடக்கிறது.

5. வெயிலில் அலையாதே; உடல் கருத்து விடும்.

மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

மனக்கோட்டை: படிக்காமலே தேர்வில் வெற்றிபெற்றுவிடலாம் என்று சில மாணவர்கள் மனக்கோட்டை கட்டுகிறார்கள்.

கண்ணும் கருத்தும்:
கண்ணும் கருத்தாய் கவனமுடன் படித்தால் முதல் மதிப்பெண் பெறலாம்.

அள்ளி இறைத்தல்:
பணத்தைக் கணக்குப் பார்க்காமல் அள்ளி இறைத்தால் விரைவில் வறுமைநிலை அடைவாய்.

ஆறப்போடுதல்:
பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தாது ஆறப்போடுதல் அநேக தீயவிளைவுகளைத் தடுக்கும்.

சொற்களைப் பிரித்துப் பொருள் தருக.

1. கானடை : கான் அடை காட்டைச் சேர்
   கான் நடை – காட்டுக்கு நடத்தல்
   கால் நடை – காலால் நடத்தல்
2. வருந்தாமரை: வரும் தாமரை தாமரை மலர்
   வரும் தா மரை – தாவும் மான் வருகிறது.
   வருந்தா மரை – துன்புறாத மான்
3. பிண்ணாக்கு : பிண்ணாக்கு – எள், கடலை ஆட்டும்போது கிடைப்பது.
   பிள் நாக்கு – பிளவுபட்ட நாக்கு
4. பலகையொலி : பலகை ஒலி – பலகையால் ஏற்படும் ஒலி
   பல கை ஒலி – பல கைகள் தட்டும் ஒலி.

உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.

1. தாமரை இலை நீர் போல:
   என் நண்பன் தாமரை இலைநீர் போலப் பட்டும் படாமலும் பழகுவான்.

2. மழைமுகம் காணாப் பயிர்போல:
   தாயை இழந்த கருணையன் மழை முகம் காணாப் பயிர்போல வாடினான்.
3. கண்ணினைக் காக்கும் இமைபோல:
   இறைவன் அனுதினமும் நம்மைக் கண்ணினைக் காக்கும் இமைபோலக் காத்துக் கொண்டு இருக்கிறார்.

4. சிலை மேல் எழுத்து போல:
சிறுவயதில் கற்கும் அறக்கருத்துகள் சிலைமேல் எழுத்து போல் மனதிலே நிலைத்து நின்று நம் வாழ்வை வழி நடத்தும்.

பழமொழிகளை நிறைவு செய்க.

1.உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
2.ஒரு பானைச் சோற்றுக்கு, ஒரு சோறு பதம்.
3.உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
4.விருந்தும் மருந்தும் மூன்று நாட்கள்.
5.அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.

இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தாள், மலை வாழ்வார், முத்துப்பல்
எ.கா: இன்சொல் – பண்புத்தொகை. இனிமையான சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு.

1. எழுகதிர் – வினைத்தொகை. மனித வாழ்க்கை எழுகதிர் போன்றது.
2. கீரிபாம்பு – உம்மைத்தொகை. கலாவும் மாலாவும் கீரியும் பாம்பும் போல எப்பொழுதும் பகைமையோடு வாழ்கின்றனர்.
3. பூங்குழல் வந்தாள் – அன்மொழித்தொகை. பூ போன்ற கூந்தலையுடைய (குழல்) பெண் வந்தாள்
4. மலை வாழ்வார் – ஏழாம் வேற்றுமைத் தொகை. குறிஞ்சி நில மக்கள் மலையின் கண் வாழ்வார்.
5. முத்துப்பல் – உவமைத்தொகை. மாலாவின் முத்துப்பல் மேலும் அவளுக்கு அழகு சேர்க்கிறது.

ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக:
புதுக்கோட்டை - புதுகை,
திருச்சிராப்பள்ளி - திருச்சி,
உதகமண்டலம் - உதகை,
கோயமுத்தூர் - கோவை,
நாகப்பட்டினம் - நாகை,
புதுச்சேரி - புதுவை,
கும்பகோணம் - குடந்தை,
திருநெல்வேலி - நெல்லை,
மன்னார்குடி - மன்னை,
மயிலாப்பூர் - மயிலை,
சைதாப்பேட்டை - சைதை

ஞா.ஜோ. அந்தோனி பிரகாஷ்.

www.Padasalai.Net